1982 மார்ச் 2]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி இலங்கையிலே இருந்து தாயகம் திரும்பியவர்கள் எத்தனை பேர்கள் என்று கேட்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்ட வாரியாக கேட்கப்படவில்லை. ஆகையினால் சேலத்தைப்பற்றிய குறிப்பை, தனிக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்துத் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமைப் பிரச்சினை.

விடுதி வளாகத்தில் மன்ற உறுப்பினர் தாக்கப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று பேரவையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கிணங்க, மாண்புமிகு உறுப்பினர் திரு. தீர்த்தராமன் அவர்கள் தாக்கப்பட்டது குறித்த பிரச்னையைப் பேரவையில் எப்படி எடுத்துக்கொள்வது என்பது குறித்து அலுவல் ஆய்வுக்குழு கூடி ஆராய்ந்தது. அங்கே எடுக்கப்பட்ட முடிவின்படி, அப்பிரச்னை குறித்து கொடுக்கப் பெற்றுள்ள உரிமை மீறல் அறிவிப்பை எடுத்துக்கொள்கிறேன்.

பேரவையின் 245-வது விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையைப் பேரவையில் எழுப்ப என் அனுமதி கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. தீர்த்தராமன் அவர்கள் ஒரு முன்னறிவிப்பு கொடுத்து இருக்கிறார். அவ்வறிவிப்பை நான் அனுமதித்தபடி, பேரவையில் எழுப்ப என் இசைவை அளிக்கிறேன்.

பேரவையின் 250-வது விதிக்கிணங்க அவ்வறிவிப்பை பேரவைக்கு நான் படித்துவிடுகிறேன்.

"1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 26 ஆம் நாள் அன்று தமிழ்நாடு சட்டப் பேரவை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பின்பு நான் எனது சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் தங்கிவிட்டு, இரவு சுமார் 8-30 மணி அளவில் நானும் சட்டமன்ற உறுப்பினர் திரு. சுந்தரமூர்த்தி மற்றும் இரண்டு நண்பர்களுடன் வெளியில் சாப்பிடச் சென்றுகொண்டிருக்கையில் என்னைக் கொலை செய்யும் நோக்கத்தோடு சிலர் என்னுடைய பின்புறமாகக் கழுத்தில் இறுக்கமாகப் பிடித்துக் கீழே தள்ளி இரும்புப் பூண் போட்ட தடியாலும், பயங்கர ஆயுதங்களாலும் தாக்கினார்கள். அதனால் எனக்குக் கழுத்து மற்றும் உடம்பெல்லாம் பல பாகங்களில் காயங்கள் ஏற்பட்டது.

[பேரவைத் தலைவர்] [1982 மார்ச் 2

மேலும் அங்கிருந்த சட்டமன்ற உறுப்பினர்களும், நண்பர்களும் என்னை விடுதிக்குள் அழைத்துச் சென்ற பிறகும் கூட உள்ளேயும் வந்து தாக்கினார்கள். அங்கிருந்தவர்கள் மூன்று பேர்களைப் பிடித்து அங்கு இருந்த போலீஸ்காரர்களிடம் ஒப்படைத்தார்கள். ஆனால், போலீஸ்காரர்கள் அவர்களைத் தப்பச் செய்துவிட்டார்கள். மேலும் இன்று (27—2—1982) காலை சுமார் 9-30 மணி அளவில் நான் அறையில் இல்லாத நேரத்தில் மீண்டும் என்னைத் தாக்க முயற்சிகள் நடந்துள்ளது.

நான் சட்டமன்ற உறுப்பினரின் கடமையை நிறைவேற்ற முடியாமலும் தடுக்கும் வகையிலும் என்னைக் கொலை செய்ய முயன்றார்கள். எனவே இந்த உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்புகிறேன்''.

இதில் உரிமை மீறல் மேலெழுந்தவாரியாக இருக்கிறதா என்று நான் தீர்ப்பு கூறுமுன், இது எப்படி உரிமை மீறல் என்பதைக் குறித்து சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். திரு. தீர்த்தராமன் அவர்கள்.

திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வெள்ளிக்கிழமை அன்று (26—2—1982) சட்டமன்றக் கூட்டத் தொடரில் கலந்து கொண்டு என்னுடைய அறைக்குச் சென்று விட்டேன். என்னுடைய அறையில் ஓய்வு எடுத்துக்கொண்டு பின்னர் சுமார் இரவு 8-30 மணி அளவில் நானும் சட்டமன்ற உறுப்பினர் சுந்தரமூர்த்தி அவர்களும், மற்றும் இரண்டு நண்பர்களும் உணவு அருந்துவதற்காக வெளியில் செல்லலாம் என்று எண்ணி, அறையை விட்டு, வெளியே வந்து, சட்டமன்ற விடுதிக்கு முன்பக்கம் வரும் நேரத்தில், என்னுடைய பின்பகுதியில் இருந்து சிலர் வந்து என்னைத் தாக்கினர். திரு. பூமிநாதன் என்பவர் என் மீது வேகமாகப் பாய்ந்து கழுத்தை, இறுக்கப் பிடித்து, கீழே தள்ளி எனக்குக் காயங்கள் ஏற்படுத்தினார். அப்படி தாக்கியவர்களுடன் சேர்ந்து சுமார் 10 அல்லது 15 பேர் இருந்தனர். என்னைத் தாக்கிய சம்பவம் நடைபெற்ற அந்த நேரத்தில் பல சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கே இருந்தார்கள். என்னைத் தாக்கியவர்கள், என்னைத் தாக்குகின்ற நோக்கத்திலும், திட்டமிட்டு கொலை செய்யும் நோக்கத்திலும் காலையில் இருந்து அங்கே வட்டம் இட்டுக்கொண்டு இருந்தார்கள். இதை என்னை அவர்கள் தாக்கியபின்தான் உணர முடிந்தது. அப்படித் தாக்கப்படுகின்ற நேரத்தில், அந்த இடத்தில் இருந்தவர்கள் என்னைக் காப்பாற்றி விடுதிக்கு அழைத்துச் சென்றார்கள். அப்படி அழைத்துச் செல்லப்பட்ட பின்பும், சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்குள்ளும் நுழைந்து அவர்கள் என்னைத் தாக்க முற்பட்ட போது, அவர்களைச் சுற்றிப் பிடித்து வளைத்தனர். அப்போது திரு. பூமிநாதன் என்பவரும், காசிநாதன் என்பவரும், ஜார்ஜ் என்பவரும் அகப்பட்டார்கள். அவர்களைப் பிடித்துப் போலீ

1982 மார்ச் 2] [திரு. ப. தீர்த்தராமன்]

சில் ஒப்படைத்தார்கள். சிறிது நேரத்திற்குப் பின்னர் அதை பற்றிக் கேட்ட நேரத்தில் அவர்கள் தப்பித்து விட்டார்கள் என்று சொன்னார்கள். அங்கே வந்த காவல் துறை அதிகாரி களிடத்தில் இது பற்றி கேட்ட நேரத்தில், போலீசில் ஏன் நீங்கள் ஒப்படைத்தீர்கள் என்ற பதிலை அவர்கள் தந்தார்கள்.

எனக்குக் கழுத்திலும், கால், கை போன்ற இடங்களிலும் காயம் ஏற்பட்டது. கழுத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. அதற் காக மருத்துவ மனைக்குச் சென்று சிகிச்சைப் பெற்று வந்தேன். இந்த நிகழ்ச்சி நான் சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையில் கடமையைச் செய்வதற்கு ஊறு செய்யும் விதத்தில் நடந்து இருக்கிறது. இதை ஏற்படுத்தியவர்கள் என்னுடைய உரிமையை பாதிக்கும் வகையில் நடந்து கொண்டார்கள் என்பதையும், அவர்களுக்கு உறுதுணையாக இருந்த காவல் துறை யினரும் அவர்களைத் தப்ப விட்டு விட்டார்கள் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சம்பவத்தை ஏற்படுத்தியவர்கள் என்னுடைய அறை யைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டனர் என்றும், என்னைக் கொலை செய்ய வந்தார்கள் என்றும் அங்கேயிருந்த பலருக்குத் தெரியும். குறிப்பாக இந்தச் சம்பவம் நடந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர் களும், மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திருமாறன் அவர் களும், மாண்புமிகு உறுப்பினர் அப்பாதுரை அவர்களும், மாண்புமிகு மேலவை உறுப்பினர் சி. ஆர். லட்சுமிகாந்தன் அவர் களும் மற்றும் பல உறுப்பினர்களும் அந்த இடத்தில் இருந்தார்கள். இந்தச் சம்பவத்தைக் கண்டார்கள் என்பதையும் இங்கே நான் ஆதாரத்தோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக் கிறேன்.

மேலும், என்னை அடித்த நேரத்தில், பலமாகத் தாக்கப் பட்டதால், நான் அணிந்திருந்த சட்டை கிழிக்கப்பட்டது. அதை நேற்று சட்டமன்றத்தில் கொண்டு வந்து காண்பித்தேன் என்ப தையும் இங்கே எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தச் சம்பவம் நடந்த காரணத்தால் என்னுடைய உரிமை பாதிக்கப் பட்டு இருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால், என்னை அடித்த நேரத்தில், இன்னார் தான் என்னை அடித்தார்கள் என்று ஆதாரபூர்வமாக சொல்கின்ற வகையில் என்னை அடித்த வர்கள் பிடிக்கப்பட்டனர். அவர்கள் காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த செயலாளர் திரு. மிநாதன், அந்தக் கட்சியைச் சேர்ந்த பேச்சாளர் காசிநாதன் மற்றும் அவர்கள் கட்சியைச் சேர்ந்த ஜார்ஜ் என்பவர்கள்தான் என்ப தைச் சொல்லி, இந்தச் சம்பவம் என்னுடைய உரிமையை பாதிக் கும் வகையில் இருக்கிறது என்பதைச் சொல்லி, இதை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று சொல்கிறேன்.

சத்யமேவ வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1982 மார்ச் 2

(முற்பகல் 10.10)

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : தலைவரவர்களே, எங்கள் கட்சியின் செயலாளரைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள் (குறுக்கீடுகள்). அவர்கள் பேசும்போது நாங்கள் யாரும் குறுக்கிட வில்லை........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தீர்த்தராமன் உங்களைப்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. அதனால் உங்கள் யாருக்கும் இந்தப் பிரச்சனையில் பேச அனுமதி இல்லை. தாக்கப்பட்டவர் திரு. தீர்த்தராமன். அவர் உரிமை மீறல் பிரச்சனையைக் கொண்டு வந்திருக்கிறார். உரிமைப் பிரச்சனையைக் கொண்டு வந்ததற்கான காரணங்களைச் சொன்னார். அதைப் பற்றி மற்றவர்கள் வாதப்பி திவாதம் நடத்த வேண்டியதில்லை.

திரு. குமரி அனந்தன் : தலைவரவர்களே, அங்கே என்ன நடந்தது என்பதை நான் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்.)

திரு. கே. எம். தங்கமணி : அவருக்கு பேச அனுமதி கொடுத்தால் எங்களுக்கும் அனுமதி அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்சனையைக் கொண்டுவந்தவர் தன்னைக் தாக்கியதாக சிலருடைய பெயர்களைக் குறிப்பிட்டிருக்கிறார். இந்த அவையில் உள்ள உறுப்பினர்கள் யாருடைய பெயரையும் சொல்லவில்லை. ஆகவே, இதில் யாருக்கும் விளக்கம் சொல்ல அனுமதி இல்லை. அப்படி அனுமதிக்கின்ற வழிமுறை சட்டமன்ற வரலாற்றில் கிடையாது.

திரு. ஜி. மூர்த்தி : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டருக்கு இடமில்லை. உட்காருங்கள்.

உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டுவந்தவர் விளக்கம் அளித்திருக்கிறார். நேற்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவிலே கூட இங்கே இருக்கின்ற உறுப்பினர் யாருடைய பெயரையாவது அவர் குறிப்பிட்டுச் சொன்னால் அந்த உறுப்பினருக்கு விளக்கம் சொல்ல அனுமதி அளிக்கிறேன் என்று சொன்னேன். ஆனால் அவர் யாருடைய பெயரையும் சொல்லவில்லை. ஆகவே, இதிலே யாருக்கும் விளக்கம் அளிக்க அனுமதி இல்லை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு தலைவரவர்களே,.... (குறுக்கீடுகள்).

1982 மார்ச் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் என்ற அந்த பிரச்சினையைப் பொறுத்தவரையிலே அது முடிந்துவிட்டதாகத்தான் அர்த்தம். அதில் குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் மேலும் பேச வேண்டும் என்றால் வேறு எத்தனையோ சட்ட திட்டங்கள இருக்கின்றன. அந்த முறைகளின்படி மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டுவரலாம். அதன்படி அவையிலே கொண்டுவந்து பேசுவதற்கு உரிமை உண்டு. ஆனால் இந்த உரிமை மீறல் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே சட்டமன்ற உறுப்பினர்களின் பெயர் எதுவும் சொல்லப்படவில்லை. ஆகவே இதற்கு மறுப்போ அல்லது எதிர்ப்போ தெரிவித்துக்கொண்டிருக்கவேண்டும் என்று எண்ணுவது நல்லதல்ல. இந்தப் பிரச்சினையை இத்தோடு முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. குமரி அனந்தன் : தலைவரவர்களே, நான் சொல்ல வருவது.... (குறுக்கீடுகள்— குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் அமரவேண்டும். இந்த உரிமை மீறல் பிரச்சினையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பெயர் எதுவும் சொல்லப்படவில்லை. கட்சிக்காரர்களின் பெயர்கள் மட்டும்தான் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், அதற்கெல்லாம் விளக்கம் சொல்லவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கருதினால் அதை அவைக்கு வெளியிலேதான் வைத்துக்கொள்ளவேண்டும். இங்கே சொல்லவேண்டும் என்றால் அதற்குரிய விதிமுறைகளின்படி மற்ற வகைகளில் கொண்டு வந்துதான் பேச முடியும். நான் மாண்புமிகு குமரி அனந்தன் அவர்களை ரொம்பவும் மதிக்கிறேன். ஆனால் இப்போது அவைத் தலைவருக்கு இருக்கின்ற இக்கட்டான சூழ்நிலையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணரவேண்டும். தற்போது சூடு ஏறாமல் பிரச்சினை முடிந்து விட்டது. ஆகவே இதனை இத்துடன் முடித்துக்கொள்ளவேண்டும்.

திரு. குமரி அனந்தன் : தலைவரவர்களே, நான் ஒரு சிறு விளக்கத்தை.... (குறுக்கீடுகள், குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர். : குமரி அனந்தன் அவர்கள் அமர வேண்டும்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, அவர்கள் சொல்வது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் நான் மேற்கொண்டு யாரையும் பேச அனுமதிக்கப் போவதில்லை. இதற்கு என்னுடைய தீர்ப்பு பின்னால் வழங்கப்படும். (குறுக்கீடு) கட்சி விவகாரங்களை எல்லாம் வெளியேதான் வைத்துக்கொள்ளவேண்டும். அவையிலே கூடாது.

திரு. குமரி. அனந்தன : தலைவரவர்களே, நால் ஒரு சிறு எகஸ்ப்ளனேஷன் தான் . . (குறுக்கீடுகள் —குழப்பம்.)

(முற்பகல் 10.20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சங்கரய்யா அவர்களுக்கு நான் ஒனறைச் சொல்லிக் கொள்கிறேன். அந்தக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றி எதுவும் சொல்லப் பெற வில்லை. அவர்கள் தூண்டி விட்டார்கள் என்பதாக எதுவும் குற்றம் சாட்டப்பெறவில்லை........(குறுக்கீடுகள்— குழப்பம்.)

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, நான் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்சி னையைப் பொறுத்தவரைக்கும் எதுவும் விவாதம் வேண்டாம். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இது குறித்து என்னுடைய முடிவு பின்னர் அறிவிக்கப்படும். ஆகவே, அது தவிர, வேறு எதாவது இருந்சால், பாயின்ட் ஆட் ஆர்டரில் நீங்கள பேச லாம்.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, நான் நேற்று அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவு என்ன என்பது பற்றித்தான் விளக்கம் பெற விரும்புகிறேன். ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவை இன்றைக்கும் கூட்டயிருக்கிறோம். அதிலே நீங்கள் திரும்பவும் பேசலாம்.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே. திரு. குமரி அனந்தன் அவர்களுக்கு விளக்கம் தர சந்தர்ட்பம் அளிக் கப்பெறும் என்று.... (குறுக்கீடுகள்— குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த உரிமை மீறல், பிரச்சினையைப் பொறுத்து, இதற்கான சட்டதிட்டங்கள்படி, இதுவரையில்தான் அனுமதிக்கலாம். வேண்டுமானால் புதிய உரிமை மீறல் பிரச்சினை கொடுங்கள். (குறுக்கீடுகள்.)

திரு. நா. சுந்தரராஜ் : நேற்றையதினம் அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி, திரு. தீர்த்தராமன அவர்கள் இங்கிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் பெயர்களைக் குறிப்பிட்டால்தான்..... (குறுக்கீடுகள்.)

1982 மார்ச் 2]

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்று அலுவல் ஆய்வுக் குழுவில் இந்தப் பிரச்சனை உரிமை மீறல் பிரச்னையாக வருமா வராதா என்பது நீண்ட நேரமாக விவாதிக்கப்பட்டு இறுதியாக ஒரு சுமுகமான முடிவு ஏற்படவேண்டும் என்பதற்காக இதை உரிமை மீறல் பிரச்னையாக எடுத்துக் கொள்வது என்ற ஒரு முடிவும் அந்தப் பிரச்னையின் அடிப்படையில் பேசுகிற மாண்புமிகு உறுப்பினர் தீர்த்தராமன் அவர்கள் வேறு கட்சியினுடைய பெயரை இங்கே அவர்களுடைய பேச்சில் இழுத்திட நேரிட்டால் அந்தக் கட்சிக்கு உரியவர் என்ற முறையில் நண்பர் குமரி அனந்தன் அவர்கள் அதற்கான விளக்கத்தை மாத்திரம் சொல்லலாம் என்ற முடிவும் நேற்றைய தினம் எடுக்கப்பட்டிருக்கிறது. திரு. குமரி அனந்தன் அவர்கள் நீண்டதொரு உரையாற்றவோ அல்லது திரு. தீர்த்தராமன் அவர்கள் எடுத்து வைத்த பிரச்னையை மறுக்கவோ தாங்கள் அவர்களுக்கு இங்கே அனுமதி அளிக்காவிட்டாலும் அவர்கள் கட்சிப் பெயர் குறிப்பிடப்பட்ட அந்த விவகாரத்திற்கு மட்டும் அவர்கள் மறுப்பு தெரிவிப்பதற்கு அல்லது விளக்கம் தெரிவிப்பதற்கு அவர்களை அனுமதிக்கலாம். நேற்று அலுவல் ஆய்வுக் குழுவில் அப்படிப்பட்டதொரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 10.30)

திரு. என். சங்கரய்யா : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல், இந்த உரிமைப் பிரச்னையை எடுத்துக் கொள்வது என்பதே ஒரு உடன்பாட்டின் அடிப்படையிலே ஏற்பட்டது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'தூண்டி விடப்பட்டது' என்ற வார்த்தை வரக்கூடாது என்று முடிவு எடுத்தோம். 'தூண்டி விடப்பட்டது' என்ற வார்த்தை எங்கும் வரவில்லை. அந்த வார்த்தை வராதபோது, நாம் என்ன பண்ண முடியும்-

திரு. என். சங்கரய்யா : இந்த உரிமைப் பிரச்னையை கட்சி உடன்பாட்டின், காம்பிரமைஸ் அடிப்படையில் ஏற்பட்டது. இரண்டு பக்கத்தில் உள்ளவர்களும் மதிக்கப்பட வேண்டியவர்கள் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதை ஊர்ஜிதப் படுத்தி இருக்கிறார்கள். அவருடைய கட்சியினுடைய செயலாளர் பெயர் வந்ததால், அந்தக் கட்சியின் தலைவர் என்ற முறையில், அதைப்பற்றிச் சுருக்கமாக, மறுப்பு அளிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். இந்த உடன்பாடுதான் அலுவல் ஆய்வுக் குழுவிலே ஏற்பட்டது. எங்கள் கட்சியின் செயலாளர் பெயர் வந்தால், அதற்கு பதிலளிக்க வேண்டாமா உங்கள் கட்சியின் செயலாளர் பெயர் வந்தால், நீங்கள் பதிலளிக்க அனுமதிக்க மாட்டீர்களா? ஆகவே, சுருக்கமாக திரு. குமரி அனந்தன் விளக்கம் அளிப்பதற்கு வாய்ப்பளித்து அவருடைய கருத்தைக் கேட்டு, அதற்குப் பிறகு உங்கள் முடிவைச் சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

திரு. நா. சுந்தரராஜ். : இந்த அவையில் இந்திரா காங்கிரஸ் பற்றி, இந்திரா காந்தியைப் பற்றிப் பேசினால், அதற்கு நாங்கள் பதிலளிக்க வாய்ப்பளிக்க வேண்டும். சட்ட மன்ற உறுப்பினர்கள் அவ்வாறு பேசவோ, எழுதவோ கூடாது என்ற கட்டுப்பாட்டின் அடிப்படையில் ஒப்புகொள்ளப்பட்டது. தூண்டுதல் பேரில் தாக்கப்பட்டார் என்ற குறிப்புகளை நீக்கியிருக்கிறீர்கள். ஆனால், இன்றைக்கு ஒரு உறுப்பினர் யாரையும் குற்றம் சாட்டாது, பொதுப்படையாகப் பேசிவிட்டு, கடைசியாக இன்னார் என்று குறிப்பிடாமல், அவர் கட்சியைச் சார்ந்தவர் என்று சொன்னதை குமரி அனந்தன் அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் கட்சியைச் சார்ந்தவர் அங்கே போயிருக்கிறார்; அதை அவர் மறுக்கவில்லை. இதை அவர் ஒப்புக் கொண்டிருக்கிறார். அடித்தாரா, அடிக்கவில்லையா என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும்.....
(கூச்சல், குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குமரி அனந்தன் அவர்கள் என்ன விளக்கம் சொல்ல விரும்புகிறாரோ அதைச் சொல்லாம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அன்று அலுவல் ஆய்வுக் குழுவிலே கலந்து கொண்ட கட்சித் தலைவர்களும் எல்லாவற்றையும் நினைவுபடுத்திய பின்னர் எனக்கு இந்த உரிமையை நுங்கள் அளித்தற்கு பன்னூறு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது அருமைக்கும், மாண்புக்கும் உரிய தீர்த்தராமன் அவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்தில், எங்கள் கட்சியினுடைய செயலாளர் பூமிநாதன் தாக்கியதாக உண்மைக்கு மாறான தகவலைத் தந்தார்கள். நான் வெளியிலே சென்றிருந்தபோது அவர் சொன்ன வாதத்தை எடுத்துக்கொண்டு பேசினாலும், நான் என்னுடைய வாதத்திலே நிற்கிறேன். நாங்கள் வெளியே சென்றிருந்தபோது, எங்களைச் சிலர் தாக்கினார்கள் என்றும் அவர்களை அவர்களிடமிருந்து எங்களை சில எம்.எல்.ஏக்கள் மீட்டு உள்ளே அனுப்பினார்கள் என்றும் முதலிலே கூறியவர் இன்று நான் வெளியே செல்ல எண்ணியபோது என்று.....
(கூச்சல் குழப்பம்) மாற்றிப் பேசுவதையும், கா.கா.தே.கா. தோழர்கள் எங்களைத் தாக்கினார்கள் என்று சொல்வதையும் நான் மறுக்கிறேன். * * * * * * *

(கூச்சல், குழப்பம்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1982 மார்ச் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பூமிநாதன் அடிக்கவில்லை என்று வேண்டுமென்றால் சொல்லுங்கள். * * * * என்று சொன்னால் மீண்டும் பிரச்சினை வரும். குமரி அனந்தன் அவர்களுடைய உணர்வுகளை என்னால் புரிந்து கொள்ள முடியும் என்றாலும் புதுப் பிரச்சினையை எழுப்பாமல் கருத்துக்களைச் சொல்ல முடியுமென்றால் அவர்கள் சொல்லட்டும். பிரச்சினைகள் வளர்வதை நான் விரும்பவில்லை. எனவே அவர் குற்றச் சாட்டாகக் குறிப்பிட்டதை சபை குறிப்பிலே இருந்து நீக்குகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பூமிநாதனும் அவரோடு இருந்த காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி தோழர்களும் கைது செய்யப்பட்டு இன்று பொறுப்பில் வெளி வந்திருக்கிறார்கள். * * * (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குமரி அனந்தன் அவர்கள் அவற்றை வெளியில் பேசும் போது குறிப்பிடலாம். அவைக்குள் அப் பிரச்சினை தேவை இல்லாதது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பூமிநாதன் என்ற எங்கள் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் செயலாளர், அவரோடு சேர்ந்திருந்த காந்தி, ஜார்ஜ் செல்வம் என்ற எங்கள் அன்பிற்குரியபல தோழர்கள் தாக்கப் பட்டிருக்கிறார்கள். பூமிநாதனுடைய சட்டை கிழிந்திருக்கிறது. கிழிந்த சட்டை போலீஸ் ஸ்டேஷனில் கொடுக்கப்பட்டிருக்கிறது. (கூச்சல், குழப்பம்).

(முற்பகல் 10-40).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தீர்த்தராமன் அவர்கள் தன்னுடைய உரிமைப் பிரச்சினையாக இந்த அவையிலே உறுப்பினராகத் தாம் இருந்துபணியாற்றுவதன் காரணமாக தன்னுடைய உரிமை மறுக்கப் பட்டிருக்கிறது, ஆகவே உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்களிடம் தீர்மானத்தைக் கொடுத்தார்கள் தாங்களும் அதைப்பற்றி உறுப்பினர் விளக்கம்தரவேண்டுமென்று கேட்டீர்கள். அவர்களும் விளக்கம் தந்தார்கள். அவர்கள் விளக்கம் தருகின்றபோது இந்த அவையிலே உள்ள யாரையும் பற்றி எந்தக் குற்றச்சாட்டும் குறையும் சொல்லவில்லை. ஆனால் ஒரு கட்சியைச் சேர்ந்தவரின் பெயரைச் சொல்லி தன்னைத் தாக்கினார்கள் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு தன்னைப் பற்றி இருக்கின்ற உரிமைகள் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் காந்தி-காமராஜ் தேசியக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தாக்கினார்கள் என்று சொன்னதன் காரணமாக அந்தக் கட்சியின் தலைவராக இருக்கின்ற திரு. குமரி அனந்தன் அவர்கள் அதுபற்றிய விளக்கத்தைத் தர அனுமதிக்கவேண்டுமென்று திரு. சங்கரய்யா அவர்களும் மாண்புமிகு எதிக்கட்சித் தலைவர் அவர்களும் எடுத்துச்சொன்னார்கள். அதை ஏற்றுக் கொண்டு தாங்கள் திரு. குமரி அனந்தன் அதைப்பற்றி எடுத்துச்சொல்லலாம் என்றுதீர்ப்பு அளித்திருக்கிறீர்கள. காந்தி காமராஜ் தேசியக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. பூமிநாதன் தாக்கினார் என்று சொன்னார்கள் தாக்கினார் என்று சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லவோ அல்லது அதைமறுக்கிறேன் என்று சொல்லவோ அவர்களுக்கு உரிமை உண்டு. அந்தக் கருத்தைச் சொல்லி இந்த விவாதத்தை முடித்து விடுவது நல்லது. மற்றையப் பிரச்சினைகள் எல்லாம் வழக்கு மன்றத்திலே வருகின்றபோது அல்லது இதை உரிமைக் குழுவிற்கு விட்டு தாங்கள் தீர்ப்பளிப்பீர்களானால் நான் அப்படிச் சொல்லவில்லை—அங்கே அது விசாரிக்கப்படுகிறபோது முழு உண்மைகள் வெளிவரும். அவர்கள் காந்தி-காமராஜ் தேசியக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்று சொன்னதின் காரணத்தினால் அதைப்பற்றிய விளக்கத்தைத் தருவதற்கு அந்தக் கட்சியைச் சேர்ந்த தலைவருக்கு அந்தக் கருத்தை ஏற்கவோ அல்லது முழுவதும் மறுப்பதற்கோ உரிமை இருக்கிறது. அதைத் தான் தாங்களும் சொன்னீர்கள். அந்த அளவுக்கு திரு. குமரி அனந்தன் அவர்கள் முடித்துக் கொண்டு மாண்புமிகு தலைவர் அவர்கள் சொன்னதைப்போல் பல்வேறு பிரச்சினைகள் இருந்தால் அதைச் சட்டவிதிகளின்படி எப்படிக் கொண்டுவர வேண்டுமோ அப்படிக் கொண்டு வரலாம் என்பதைத் தெரிவித்து அந்த முறையை திரு. குமரி அனந்தன் அவர்கள் கையாள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு தலைவர் அவர்களுடைய ஆணைக்கிணங்க.

திரு. குமரி அனந்தன் : காந்தி—காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய செயலாளர் திரு. தீர்த்தராமன் (குறுக்கீடு)-ஆம், சில நாட்களுக்கு முன்பு அவர் செயலாளராக இருந்தவர்தான், மாறிவிட்டார் என்பதை சொல்லக்கூடாது என்று நினைத்தேன். என்னமோ என்னோடு இருந்த காரணத்தால் நான் சொல்லிவிட்டேன் (குறுக்கீடு-ஜனதா கட்சியிலே நான் இருந்தேன் உண்மைதான் அவர் சொன்னதற்காக நான் விளக்கம் சொல்லவேண்டும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுக்கீடுகளுக்கு எல்லாம் விளக்கம் சொல்ல வேண்டாம். ஜனதா கட்சி குறிப்பிலே ஏறவில்லை. ஏறாது ஜனதா கட்சி என்று எல்லாம் ஆரம்பித்தீர்கள் என்றால் வரலாறுஆகும். திரு. குமரி அனந்தன் உணர்ச்சிவசப்படாமல் பேச வேண்டும்.

1982 மார்ச் 2]

திரு. குமரி அனந்தன் : எனவே பூமிநாதன் எங்களுடைய செயலாளர் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியில் இப்போது இருந்து கொண்டிருக்கிற எங்கள் அருமைக்குரிய முன்னாள் இருந்த செயலாளர்களிலே இப்போது எங்களோடு இருந்து கொண்டிருக்கின்ற செயலாளர்களிலே ஒருவராகிய திரு. பூமிநாதனும் அவர்களோடு இருந்த எங்களுடைய தோழர்களும் தாக்கப்பட்டார்கள் என்பது உண்மை. அவர்கள் யாரையும் தாக்கவில்லை. (குறுக்கீடு) போலீஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டிருக்கிறது. தாக்கியவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை தாக்கப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டார்கள். நேற்று உரிமை மீறல் இல்லை என்று சபா நாயகர் அவர்கள் சொன்னார்கள். ஏனென்றால் விடுதிக்கு வெளியே நடந்தது, விடுதிகூட உரிமை மீறலில் வராது எனவே இந்தப் பிரச்சினை உரிமைமீறலில் வராது என்ற கருத்தைச் சொல்லி என்னுடைய கட்சி செயலாளரும் மற்றஉறுப்பினர்களும் பாதிக்கப்பட்டார்கள் தாக்கப்பட்டார்கள் என்பதை எடுத்துச் சொல்லி முடிக்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவை முன்னவர் நாவலர் இங்கே எடுத்துக் கூறியதைப்போல் ஒரு கட்சியினுடைய பெயரைச் சொல்லி குற்றஞ்சாட்டப்பட்டால் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர் அதற்கான மறுப்பை அளிப்பதற்கு இந்த அவையிலே உரிமை பெற்றவர்கள். அந்த உரிமையைத்தான் அருமை நண்பர் திரு. குமரி அனந்தன் அவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமேயல்லாமல், அதற்குமேல் விளக்கங்கள் அளிப்பதும், உரிமைகளைப் பற்றிப் பேசுவதும் முறையாகாது. நான் முதலில் ஒரு உறுப்பினரின் உரிமையை எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் காப்பாற்றும் பொறுப்பு எனக்கும் இருக்கிறது என்பதால்தான் அலுவல் ஆய்வுக் குழுவில் நடந்தவற்றைப் பற்றிச் சொன்னேன். ஆகவே தாங்கள் பணித்தவாறு அவர்கள் கட்சியைப் பற்றி சொல்லியவற்றை மட்டும் அவைக் குறிப்பிலே எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** ** ** நீக்கிவிட்டு மற்றவற்றை எடுத்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.